# புவியியல்

## மாதிரி வினாத்தாள் - பனிரெண்டாம் வகுப்பு

நேரம் : 3 மணி மதிப்பெண் : 150

### பகுதி - I

குறிப்பு - அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும், எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

#### பிரிவு - அ

கோடிட்ட இடங்களை நிரப்புக **15 x 1 = 15**

1. ஊசியிலைக் காடுகள்_____________சூழ்வாழிடம் என்று அழைக்கப்படுகின்றன.
2. மக்கள் தொகை கோட்பாட்டை முதன் முதலில் வெளியிட்டவர்___________.
3. தேம்ஸ் நதிக்கரைச் சூழலில் அமைந்துள்ள மாநகரம்____________
4. புறநகர் வளர்ச்சிக்கு____________ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாகும்.
5. வெபரின் கோட்பாடு____________என்றழைக்கப்படுகிறது,
6. எடை அதிகரிக்கும் பொருட்களை உற்பத்திச் செய்யும் தொழிலகங்களை__________க்கு அருகிலேயே பார்க்கிறோம்.
7. ஐக்கிய நாடுகள் சபையில் பெரும்பாலான நாடுகள்__________ லிருந்து கடனுதவி பெறுகின்றன.
8. வளர்ச்சி குன்றிய நாடுகள் வணிகத்தின் மூலம் ஏழ்மைக்குத் தள்ளப்படுவதை__________ என்கிறோம்.
9. போக்குவரத்து வலை அமைப்பில்___________ மற்றும் ___________ உள்ளன.
10. உலகின் முதல் செயற்கைக் கோள்___________
11. ஆர்.ஆர்.எஸ்.எஸ்.சி. மையங்கள் வழங்கும் மென்பொருள் கட்டினை__________என அழைக்கிறோம்.
12. தொலை நுண்ணுணர்வு நுட்பங்களையும் பயன்படுத்தி அறுவடைக்கு முன்பாகவே பயிரின் உற்பத்தியினை, மதிப்பிடும் ஒரு தேசிய இயக்கம்____________ஆகும்.
13. நைல் நதியினால்_________மற்றும்__________நாடுகள் பயனடைந்து வருகின்றன.
14. டி.பி.ஏ.பி. என்பது__________அரசாங்க ஆதரவுடன் செயல்பட்டு வருகின்றது.
15. ____________நாட்டில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பகுதி நகராட்சிகளில் நீருக்கு மீட்டர் பொறுத்தப்பட்டுள்ளது.

#### பிரிவு

பொருத்துக **15 x 1 = 15**

| | | |
|---|---|---|
| 16. மால்தஸ் கோட்பாடு | - | முதலாளித்துவம் மற்றும் வளங்களின் சீர்கேடு |
| 17. மார்க்ஸின் கருத்து | - | பெந்தாஸ் |
| 18. கடலடிப் பரப்பு | - | முன்னேறியப் பொருளாதாரம் |
| 19. கடல்வாழ் இயற்கொகுதி | - | மக்கள் பெருக்கம் |
| 20. பின்னடையும் வயது பிரமீடு | - | உவர் சேற்று நிலம் |

பொருத்துக

| | | |
|---|---|---|
| 21. மைய இடக்கோட்பாடு | - | பன்னாட்டு வணிகம் |
| 22. உலக நாடுகள் | - | காமா கதிர்கள் |
| 23. தொழிலக அமைவிடக் கோட்பாடு | - | ஆர்.ஆர்.எஸ்.எஸ்.சி. |
| 24. மின் காந்தக் கதிர்வீச்சு | - | லெபர் |
| 25. புறவெளிப் பயன்பாட்டு மையம் | - | வால்டர் கிறிஸ்தாலர் |

பொருத்துக

| | | |
|---|---|---|
| 26. தோல் பதனிடும் தொழிற்சாலை | - | கரும் ஈக்கள் |
| 27. ஆற்றுக் குருடு | - | வெள்ளம் |
| 28. ஹெய்டி | - | சீர்குலைவு |
| 29. கேடுவிளைவித்தல் | - | பழைய சோவியத் குடியரசு |
| 30. அமுடாரியா ஆறு | - | ஆம்பூர் |

## பிரிவு - இ

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் **10 x 1 = 10**

31. உயிர்க்கோளத்தில் வாழும் தாவரங்கள், விலங்கினங்கள் சமுதாயம்

அ) சூழ்வாழிடங்கள் ஆ) இயற்தொகுதிகள்

இ) சூழியல் ஈ) புலி

32. வளரும் நாடுகளில் மனிதத் திறனை முழுமையாக வெளிக் கொணர வாய்ப்பின்மைக்குக் காரணம்.

அ) மக்கள் தொகை குறைவு ஆ) அடிப்படைத் தேவைகளின் பற்றாக்குறை

இ) வளங்களின் பற்றாக்குறை ஈ) மக்களின் உழைப்பின்மை

33. சந்தையை மையமாகக் கொண்ட குடியிருப்புக் கோட்பாடு

அ) சந்தைக் கோட்பாடு ஆ) பொருளாதார கோட்பாடு

இ) மைய இடக்கோட்பாடு ஈ) மால்தஸ் கோட்பாடு

34. நுகர்ப்பொருட்களை விற்பதற்காக ஏற்படுத்தும் பிணைப்பு

அ) இடுபொருள் பிணைப்பு ஆ) வெளிப்படுபொருள் பிணைப்பு

இ) அத்தியாவசியப் பிணைப்பு ஈ) அத்தியாவசியமற்ற பிணைப்பு

35. தனது தேவைக்கு மேல் அதிகமாக செய்யப்படும் உற்பத்தி பொருட்கள்

அ) பற்றாக்குறை ஆ) உபரி

இ) ஏற்றுமதி ஈ) இறக்குமதி

36. சங்கேதக் குறியீடுகள் கொண்டு தொலை தூரத்திற்கு செய்தி அனுப்பப் பயன்படும் ஒரு வழி

அ) தந்தி ஆ) பிரதிகள்

இ) மின்னனு அஞ்சல் ஈ) தொலைபேசி

37. புவிப் பொருட்களின் விவரங்களைத் தூரத்திலிருந்து சேகரிக்கும் உணரிகள் மற்றும் கருவிகள்

அ) தொலை நுண்ணுணர்வு ஆ) ஆழ்ந்து நோக்கல்

இ) வான்வழிப் படங்கள் ஈ) வள செயற்கைக்கோள்

38. சுத்தமான நீர் மக்கள் அனைவருக்கும் கிடைக்க வகை செய்த நாடு

அ) மலேசியா ஆ) சூடான்

இ) நைஜர் ஈ) மளாவி

39. ஏழ்மை எனப்படுவது ஒரு

அ) சீர் அழிவு ஆ) பாதுகாப்பின்மை

இ) இடையூறுகள் ஈ) அவசர நிலை

40. விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் நீரினைச் சிக்கனமாக பயன்படுத்தும் நுட்பம்

அ) ஹைட்ரோ போனிக்ஸ் ஆ) தானியங்கும் நீர்ப்பாசனம்

இ) பெரியளவிலான நீர்ப்பாசனம் ஈ) சிறியளவிலான நீர்ப்பாசனம்

பிரிவு - ஈ

சரியான வாக்கியத்தை தேர்ந்தெடு **10 x 1 = 10**

41. அ) முதல் உயிரினங்கள் 'கடலில்' உருவாயின

ஆ) முதல் உயிரினங்கள் 'நிலத்தில்' உருவாயின

இ) முதல் உயிரினங்கள் 'சமவெளியில்' உருவாயின

42. அ) எல்லா இயற்தொகுதிகளையும்விட 'மனித இயற்தொகுதியானது' சிறப்பும் மதிப்பும் நிறைந்தது,

ஆ) எல்லா இயற்தொகுதிகளையும்விட 'நன்னீர் இயற்தொகுதியானது' சிறப்பும் மதிப்பும் நிறைந்தது.

இ) எல்லா இயற்தொகுதிகளையும்விட 'மலை இயற்தொகுதியானது' சிறப்பும் மதிப்பும் நிறைந்தது.

43. அ) உயிர்க்கோளத்தில் வாழும் தாவரங்கள், விலங்கினங்களின் சமுதாயம் 'இயற்தொகுதி' எனப்படுகிறது.

ஆ) உயிர்க்கோளத்தில் வாழும் தாவரங்கள், விலங்கினங்களின் சமுதாயம் 'உயிர்த்தொகுதி' எனப்படுகிறது.

இ) உயிர்க்கோளத்தில் வாழும் தாவரங்கள், விலங்கினங்களின் சமுதாயம் சமூகத்தொகுதி' எனப்படுகிறது.

44. அ. மித வெப்பமண்டல ஒத நிலங்கள் 'உலர் சேற்று நிலங்களாக' மாறுகின்றன.

ஆ. மித வெப்பமண்டல ஒத நிலங்கள் 'சதுப்பு நிலங்களாக' மாறுகின்றன.

இ. மித வெப்பமண்டல ஒத நிலங்கள் 'கழிமுக நிலங்களாக' மாறுகின்றன.

45. அ. குடியிருப்புச் சந்தைகள் 'செவ்வக' வடிவமைப்பினைக் கொண்டதாக இருக்கும்.

ஆ. குடியிருப்புச் சந்தைகள் 'முக்கோண' வடிவமைப்பினைக் கொண்டதாக இருக்கும்.

இ. குடியிருப்புச் சந்தைகள் 'அறுங்கோண' வடிவமைப்பினைக் கொண்டதாக இருக்கும்.

46. அ. செயல்பாடுகள் நான்கு நிலைத் தொழில்கள் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டு நடைபெறுவது ‘இடுபொருள் பிணைப்பு’ எனப்படும்.

ஆ. செயல்பாடுகள் நான்கு நிலைத் தொழில்கள் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டு நடைபெறுவது ‘வெளிப்படுபொருள் பிணைப்பு’ எனப்படும்.

இ. செயல்பாடுகள் நான்கு நிலைத் தொழில்கள் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டு நடைபெறுவது ‘செயற்பாட்டு பிணைப்பு’ எனப்படும்.

47. அ. நாள்தோறும் அல்லது குறிப்பிட்ட நாட்களில் உள்ளூரில் நடைபெறும் வணிகம் ‘தலவணிகம்’ எனப்படும்.

ஆ. நாள்தோறும் அல்லது குறிப்பிட்ட நாட்களில் உள்ளூரில் நடைபெறும் வணிகம் ‘ஊரக வணிகம்’ எனப்படும்.

இ. நாள்தோறும் அல்லது குறிப்பிட்ட நாட்களில் உள்ளூரில் நடைபெறும் வணிகம் ‘நேரிணை வணிகம்’ எனப்படும்.

48. அ. தொலை நுண்ணுணர்வினைப் பயன்படுத்தி பல்வேறு உயர்வானத் திட்டங்களை வகுக்கும் ஒரு அமைப்பு - ஐ.எஸ்,ஆர்ஓ. (ISRO)

ஆ. தொலை நுண்ணுணர்வினைப் பயன்படுத்தி பல்வேறு உயர்வானத் திட்டங்களை வகுக்கும் ஒரு அமைப்பு - எப்.ஏ.ஓ (FAO)

இ. தொலை நுண்ணுணர்வினைப் பயன்படுத்தி பல்வேறு உயர்வானத் திட்டங்களை வகுக்கும் ஒரு அமைப்பு - ஆர்.ஆர்.எஸ்.எஸ்.சி (RRSSC)

49. அ. அமேசான் மற்றும் காங்கோ ஆறுகள் பாய்கின்ற மண்டலம் ‘மிதவெப்ப மண்டலம்’

ஆ. அமேசான் மற்றும் காங்கோ ஆறுகள் பாய்கின்ற மண்டலம் ‘புவியிடைக் கோட்டு மண்டலம்’

இ. அமேசான் மற்றும் காங்கோ ஆறுகள் பாய்கின்ற மண்டலம் ‘துருவ மண்டலம்’

50. அ. NDVI என்பது ‘களப்பணி புள்ளி விவரம்’

ஆ. NDVI எனப்து ‘செயற்கைகோள் புள்ளி விவரம்’

இ. NDVI எனப்து ‘நேர்முக புள்ளி விவரம்’

## பகுதி - **II**

சுருக்கமான விடையளி எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்

எதேனும் பதினைந்திற்கு விடையளி **15 x 2 = 30**

51. சூழ் வாழிடங்கள் வரையறு
52. தொகுப்பு கிராமம் வரையறு
53. எரிசக்தி வரையறு
54. வணிகக் குழுமம் வரையறு
55. போக்குவரத்து வலை வரையறு
56. புவி நிலையங்கள் வரையறு
57. இயற்கைக் சீர்குலைவு வரையறு
58. முருகைப் பார்கள் என்றால் என்ன?
59. மக்கள் தொகைப் பரவல் சீரற்றிருக்க நான்கு காரணங்களைக் கூறுக.
60. வணிகச் சமநிலை என்பது யாது?

61. ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம் என்பது யாது?
62. தகவல்களின் வெடிப்பு என்றால் என்ன?
63. தொலை நுண்ணுணர்வு மேடை என்றால் என்ன?
64. உலகின் நீர் நுகர்வு எவ்வாறு இருக்கின்றது?
65. நிலச்சீர்க் குலைவு என்றால் என்ன?
66. நில நடுக்கம் என்றால் என்ன?
67. பாலைவனமாதல் என்றால் என்ன?
68. உயிரினப் பன்மை - குறிப்பு வரைக.
69. வன உயிரின பாதுகாப்பு - பொருள் தருக.
70. பலநிலை சாலைத்தடங்கள் என்றால் என்ன?

## பகுதி - **III**

ஒரு பத்தியில் சுருக்கமான விடையளி (200 வார்த்தைகள்) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள் **6 x 5 = 30**

ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி

71. குளிர்ப் பாலைவன சூழ்வாழிடம் - விளக்குக
72. மில்லியன் நகரங்கள் - குறிப்பு வரைக.
73. வணிகப்பொறி மற்றும் சந்தை வீழ்ச்சி - விளக்குக
74. சரக்குப் போக்குவரத்தின் நன்மைகள் - விவரி.
75 உலகின் நீர்த் தேவையைப் பற்றி எழுது.
76. வள மேலாண்மை மற்றும் பாதுகாப்பு வரலாற்றினை விளக்குக.
77. மார்க்ஸின் உட்கருத்தை விவரி?
78. தொழிலக அமைவிடக் கோட்பாடு - விவரி.
79. பாலைவனமாதல் எவ்வாறு ஏற்படுகிறது - விவரி.

## பகுதி - **IV**

**i)** விரிவான விடையளி (400 வார்த்தைகள்)

**ii)** எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்

### பிரிவு - அ

மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி **3 x 10 = 30**

80. புவியியல் ரீதியாக வணிகத்தை வகைப்படுத்தி விளக்குக.
81. நீர் மாசடையும் முறைகளை விளக்குக
82. இயற்கைக் சீர்குலைவு, வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது நாம் எவ்வாறு எதிர்கொள்ளல் வேண்டும்.
83. மழை நீர் அறுவடை குறித்து படம் வரைந்து விளக்குக.
84. நீர் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு - விளக்குக.

### பிரிவு - ஆ

**1 x 10 = 10**

85. கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் பாலைவனங்களைக் குறித்து பாலைவனச் சூழ்வாழிடங்களை விளக்குக.

அல்லது

உலக வரைபடத்தில் நிலநடுக்கப்பகுதிகளைக் குறித்து சுருக்கமான விளக்கம் தருக.